


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.8.2023) தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்காக பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்லும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள வாகனத்தை பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னுரிமை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### சமூக விரோதிகள்தான் பா.ஜ.க.வில் சேருகிறார்கள்!

# நீரவ் மோடி - லலித் மோடியை வெளிநாட்டிற்கு தப்பிக்க விட்டது பா.ஜ.க.தானே!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ் பேட்டி!

**சென்னை, ஆக,6**

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ் பேட்டி, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அப்பேட்டியை இங்கே எடுத்து வெளியிட்டுள்ளோம்.**

அவரது பேட்டி வருமாறு: -

தமிழ் நாட்டில் யோக்கியமான ஆட்சி கொண்டு வரப் போகிறேன் என்றும், தான் ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்து, இரண்டாவது கையெழுத்து என்று சொல்வதற்கு முன்பு - அவர்களது கட்சி சேர்த்திருக்கின்ற ஆட்களைப் பாருங்கள்,

இன்றைக்கு செய்தி வந்திருக்கிறது. ஆரூத்ரா பைனான்ஸ்.

அதாவது மல்டிநேஷனல் கம்பெனிகளில் இருக்கக் கூடிய எக்ஸ்ட்டிவ்ஸ், பேங்கில் இருக்கக் கூடியவர்கள், இந்த ஆரூத்ரா பைனான்ஸில் இருப்பவர்கள் என்று மூன்று பேரும் சேர்ந்து, இதே போல ஐ.எப்.எஸ். என்றும் ஒன்று. இந்த ஆரூத்ராவில் மட்டும் 2400 கோடி ரூபாய் கொள்ளையடித்து கொண்டு போய் விட்டார்கள்.

மல்டி நேஷனல் கம்பெனியில் வேலை பார்க்கின்ற ஆட்களிடம் சென்று, ஒரு இலட்சம் போட்டால் மாதம் 25,000 ரூபாய் ரிட்டன் கிடைக்கும் என்று சொல்லி, கையில் இன்வெட்ஸ்மெண்ட் செய்ய காசு இல்லை என்றால், சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம், அதற்கு லோன் பேங்கில் கொடுப்பார்கள் என்று சொல்லி, அந்த பேங்க், மேனேஜ்மெண்ட், இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து 2400 கோடி ரூபாயை திருடிட்டு ஒருத்தர் ஓடிப் போய் விட்டார்.



அந்த 2400 கோடி ரூபாயை திருடினவன், உடனே பா.ஜ.க. வில் சேருகிறான். பா.ஜ.க.வில் சேர்ந்த தும் அவன் விளையாட்டுப் பிரிவு மாநிலச் செயலாளர், ஒரு கட்சியில் சேர்ந்த உடனே அவ்வளவு பெரிய பொறுப்பு கொடுப்பீர்களா?

**பெரிய யோக்கியர் மாதிரி பேசுகிறாரே அண்ணாமலை, இப்போது கேட்டால், அப்போதே நீங்கி விட்டோம் இடையிலே என்கிறார். ஆனால் இப்போது செய்திகள் என்ன சொல்கிறது? ஏராளமான பணம் கொடுத்துள்ளார். ஏதோ ஒரு நபர் இப்படி சேர்ந்துவிட்டார் என்றால் அவர்களை இப்படிச் சொல்லலாமா? ஆனால், இரண்டு ஆண்டு காலத்தில் நான் ஒரு பட்டியல் சொல்கிறேன்,**

8 கொலை வழக்கு, 11 கொலை முயற்சி வழக்கு உள்ளிட்டு 48 வழக்குகள் வைத்திருக்கக் கூடிய படப்பை குணா. அவர் பா.ஜ.க.வில் சேர்ந்து தேசிய சேவை செய்யப் போறாரா இப்போது?

**அண்ணாமலை இதற்கு பதில் சொல்ல வேண்டும்!**

6 கொலைகள், 6 முறை குண்டர் சட்டம் இதில் கைது செய்யப்பட்ட வட சென்னை கல்வெட்டு ரவி, அவர் பா.ஜ.க. கட்சிகாரர்தானே மிஸ்டர் அண்ணாமலை! அவருக்கு என்ன சட்டம் ஒழுங்கை டீல் செய்வதற்கான பதவியை நீங்கள் கொடுக்கப் போறீங்களா? அது தெரியவில்லை.!

அடுத்து 5 முறை குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறைக்குப் போய் விட்டு வந்திருக்கின்ற சேலம் ரவுடி முரளி கொலை, குற்றச்சாட்டு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட வழக்குகளில் தொடர்புடைய கஞ்சா வியாபாரி அஞ்சலை தான் உங்கள் கட்சிக்கு மகளிர் அணிச் செயலாளர். இப்படி சீர்காழி ஆனந்த் என்று பலபேரை சொல்ல முடியும்.

**கஞ்சா விற்கின்றவன், ரவுடித்தனம் செய்கின்றவன், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றவன், நீங்கள் வங்கி, பன்னாட்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து, ஒரு லட்சம் பேர்களிடம் இருந்து 2400 கோடி ரூபாய் கொள்ளையடித்தவர்களை எல்லாம் அவசரம் அவசரமாக பா.ஜ.க. கட்சியில் சேர்க்கின்றீர்கள், இவர்களை போலீஸ் அண்டக் கூடாது என்று பார்த்துக் கொள்கிறார்கள்.**

ஆரூத்ரா கேஸில் கைது ஆகி இருக்கக் கூடிய ஹரீஸ் பற்றி என்ன மக்கள் சொல்கிறார்கள் என்றால், இதே குற்றச் சாட்டுகளில் கைதான சில பேர்களை, வெளிநாட்டுக்குத் தப்பிப் போறதுக்கு பா.ஜ.க. நிர்வாகி என்கிற பொறுப்பால் இப்படி செய்கிறார்கள். யோக்கியமானவர்கள் எல்லாம் பி.ஜே.பி.யில் இல்லை.

எனவே நீரவ் மோடியையும், லலித் மோடியையும் பா.ஜ.க.தான் ஆதரித்தது, அவர்களை வெளிநாட்டிற்கு தப்ப விட்டதும் பா.ஜ.க. என்பதுதானே உண்மை !

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் க. கனகராஜ் பேட்டியளித்தது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

## முதல் பக்கத் தொடர்ச்சி

வழக்கின் விசாரணை முடிவடைந்து உடனடியாகத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக்குத் தடை விதித்து தீர்ப்பளித்தனர்.

இதையடுத்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவிப் பறிப்பு உத்தரவைத் திரும்பப் பெறக்கோரி மக்களவைத் தலைவரிடம் கோரிக்கை விடுக்க காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சி முடிவு செய்துள்ளது.

**ராகுல்காந்தி பதவிப்பறிப்புக்குக் காரணமான வழக்கு கடந்து வந்த பாதை!**

அவதூறு வழக்கில் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து ராகுல்காந்தி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு வரை வழக்கு கடந்து வந்த பாதையை பற்றி விரிவாக காணலாம்.

ராகுல் காந்தி வழக்கு கடந்து வந்த பாதை: -

மார்ச் 23, 2023: மோடி என்ற பெயர் குறித்து ராகுல் காந்தி சர்சைக்குரிய கருத்துகளை கூறியதாக தொடரப்பட்ட வழக்கில் சூரத் மாவட்ட நீதிமன்றத்தால் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார். இதனால் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் மார்ச் 24ஆம் தேதி, ராகுல் காந்தி தனது எம்.பி. பதவியை இழந்தார்.

இந்த இரண்டு ஆண்டு தண்டனைக்கு தடை கோரி ராகுல் காந்தி சூரத் செஷன்ஸ் நீதிமன்றத்தை அணுகினார். செஷன்ஸ் நீதிமன்றம் ஏப்ரல் 20 அன்று ராகுல் காந்தியின் மனுவை நிராகரித்தது.

தொடர்ந்து ஏப்ரல் 25ம் தேதி, சூரத் செஷன்ஸ் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ராகுல் காந்தி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

கடந்த மே மாதம் இந்த வழக்கில் விசாரணை நடைபெற்றது. அப்போது தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்த நீதிபதி ஹேமந்த் பிரசாக் கோடை விடுமுறைக்குப் பின் தீர்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

சூரத்தில் ராகுல் காந்தி குற்றவாளி என அறிவிக்கப்பட்ட வழக்கைத் தொடர்ந்து, ராகுல் காந்தி மீது மேலும் பல அவதூறு வழக்குகள் தொடரப்பட்டன.

ஜூலை 4 அன்று வழக்கறிஞர் பிரதீப் மோடி தாக்கல் செய்த மற்றொரு அவதூறு வழக்கு தொடர்பாக ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் வரும் ஆகஸ்ட் 16ம் தேதி அடுத்த விசாரணை வரை ராகுல் காந்திக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து, மோடி குடும்பப் பெயர் வழக்கில் ராகுல் காந்தியின் மனுவைத் தள்ளுபடி செய்து குஜராத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியாக இருப்பதாகவும், அந்த தீர்ப்பில் உயர் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை எனவும், நீதிபதி தெரிவித்தார்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதிகள் ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு தடை விதித்தனர்.

### ராகுல்காந்திக்கான தண்டனை ரத்து :

# நீதி வென்றது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு!

சென்னை, ஆக.6 -

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அவர்களுக்கு குஜராத் நீதிமன்றம் விதித்த தண்டனைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில் நீதி வென்றது என்றும் வயநாடு தொகுதி ராகுல்காந்தியை தக்க வைத்துக் கொண்டது என்றும் தலைப்பிட்டு குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நீதி வென்றது! வயநாடு ராகுல் காந்தி அவர்களைத் தக்கவைத்துக் கொண்டது!**

**அவதூறு வழக்கில் சகோதரர் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்கும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இந்த உத்தரவு நமது நீதித்துறையின் வலிமை மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், மக்களாட்சியின் மாண்புகளைக் காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### யு.பி.எஸ்.சி.தேர்வுக்குத் தயாராகும் தமிழ்நாட்டு இளைஞர்கள்

# ‘ நான் முதல்வன் ’ ஊக்கத் தொகை திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வீர்!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக.6-**

**“யு.பி.எஸ்.சி. தேர்வுக்குத் தயாராகும் தமிழ்நாட்டு இளைஞர்கள், ‘நான் முதல்வன்’ ஊக்கத் தொகைத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வீர்!” என, வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அதன் விபரம் வருமாறு :-

‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு!**

இந்நிலையில் 2023-24க்கான தமிழ் நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச்செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

**10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500**

முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். இது சமீப காலமாக UPSC சிவில் சர்வீசஸ் தேர்வில் தேர்ச்சி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் விகிதத்தை மாற்றியமைக்க தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் முயற்சியாகும்.

இதன்படி TNSDC, அதன் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக UPSC முதல்நிலை தேர்வின் ஊக்கத்தொகைக்கான மதிப்பீட்டுத் தேர்வை 10.09.2023 அன்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 1000 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் 7500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படும்.

இந்த மதிப்பீட்டுத் தேர்வை எழுதி ஊக்கத்தொகை பெற விரும்பும் ஆர்வமுள்ள மாணவர்கள், https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விரிவான அறிவிக்கையைப் படித்து பார்த்து, 02.08.2023 அன்று முதல் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 17.08.2023 ஆகும்.

இவ்வறிவிப்பையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு இளைஞர்கள் இந்திய ஆட்சிப் பணிக்கு அதிகம் தேர்வாக வேண்டும் என்று பல முன்முயற்சிகளை நமது அரசு எடுத்து வருகிறது.**

**அதில் ஒன்றாக, ‘நான் முதல்வன்’ போட்டித்தேர்வுகள் பிரிவு வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊக்கத் தொகைத் திட்டத்தை யு.பி.எஸ்.சி. தேர்வுக்குத் தயாராகும் நம் இளைஞர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

**இளைய தமிழகம் உலகை வெல்லட்டும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### டெல்லி சேவைகள் மசோதாவை நிறைவேற்றியதன் மூலம்

# டெல்லி மக்களின் முதுகில் பா.ஜ.க. குத்திவிட்டது!

## முதலமைச்சர் கெஜ்ரிவால் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஆக. 6-

டெல்லி சேவைகள் மசோதாவை மக்களவையில் நிறைவேற்றியதன் மூலம், டெல்லி மக்களின் முதுகில் பா.ஜ.க. குத்தி விட்டது என்று, முதலமைச்சர் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

டெல்லி அரசின் அதிகாரிகள் நியமனத்தில் துணைநிலை ஆளுநருக்கு அதிகாரம் வழங்கும் மசோதா, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக, ஒன்றிய அரசை விமர்சித்து டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் ட்விட்டர் பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில், இந்த மசோதாவை மக்களவையில் நிறைவேற்றியதன் மூலம், டெல்லி மக்களின் முதுகில் பா.ஜ.க. குத்தி விட்டது. இதற்கு மேல், மோடி என்ன சொன்னாலும் அதை டெல்லி மக்கள் நம்பக் கூடாது என்று கூறியுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது, ‘நான் பிரதமரானால், டெல்லிக்கு முழு மாநில அந்தஸ்து வழங்குவேன், என்று பிரதமர் மோடி கூறினார்.

ஆனால், இன்று இவர்கள் டெல்லி மக்களை ஏமாற்றிவிட்டனர் என்று அரவிந்த் கெஜ்ரிவால் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ஃபைடு உலக தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்து சாதனை!

# கிராண்ட் மாஸ்டர் குகேஷுக்கு - முதல்வர் வாழ்த்து!

## “தமிழ்நாட்டிற்குப் பெருமை!” எனப் பதிவு!

**சென்னை, ஆக.6-**

**‘செஸ்’ உலக தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்து சாதனை படைத்துள்ள கிராண்ட் மாஸ்டர் குகேஷுக்கு வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “தமிழ் நாட்டிற்கு இதுபெருமை சேர்க்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு: -

FIDE செஸ் உலகத் தரவரிசைப் பட்டியலின் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்து சாதனை படைத்துள்ள கிராண்ட் மாஸ்டர் குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்.

உங்களது உறுதியும் திறனும் செஸ் ஆட்டத்தின் மிக உயர்ந்த படிநிலைக்கு உங்களை உயர்த்தி, உலக அளவில் அதிகப் புள்ளிகளைப் பெற்றிருக்கும் இந்திய வீரராக உங்களை நிலைநிறுத்தியுள்ளன. உங்களது சாதனை உலகெங்குமுள்ள இளந்திறமையாளர்களுக்கு ஊக்கமாகவும் நமது தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.